OS. 62/2024

நாள். 27.01.2026.

வா.சா.1 – கமலா, க/பெ.தட்சிணாமூர்த்தி

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் 4 இலக்க சொத்துக்கள். 4 இலக்க சொத்துக்களுக்கு சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் இலக்க சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் சோகையன்தோப்பில் உள்ளது. எனக்கு 3 பெண் குழந்தைகள், 1 ஆண் குழந்தை என்றால் சரிதான். என் ஆண் குழந்தைதான் பிரதிவாதி என்றால் சரிதான். என் கணவர் உயிருடன் இருந்தபோது மளிகைக்கடை நடத்தி தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். மளிகைக்கடையில் இருந்து கிடைத்த வருமானத்தை வைத்துக்கொண்டுதான் சொத்துககளை கிரையம் வாங்கினார், பிள்ளைகளை படிக்கவைத்து ஆளாக்கினார் என்றால் சரிதான். 2, 3 வாதிகளான என் பெண்பிள்ளைகள் என் கணவருக்குதெரியாமல் திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. 3ம் வாதியான என் மகளுக்கு எங்கள் சம்மதத்தின்பேரில்தான் வேறுமதத்தில் திருமணம் செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் 3ம் வாதி முஸ்லிம் மதத்தை சேர்ந்தவர் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், நாங்கள் திருமணம் செய்து கொடுத்தபிறகு என் மகளும், மருமகனும் முஸ்லிம் மதத்திற்கு மாறிவிட்டனர். 2, 3 வாதிகள் என் கணவரின் சம்மதம் இல்லாமல்திருமணம் செய்து கொண்டதால் என் கணவர் தன் வாழ்நாள் முழுவதும் 2, 3 பிரதிவாதிகளை பார்க்க அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் இறப்பிற்கு 2, 3 வாதிகள் வந்தபோது ஊர் பஞ்சாயத்தில் அபராதம் கட்டித்தான் பங்கு கொண்டார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்தபிறகு மளிகைக்கடையை நானும், என் மகனும் சேர்ந்துதான் நடத்தி வந்தோம் என்றால் சரிதான். என் மகன் எப்போது என்னைவிட்டு பிரிந்து சென்றார் என்றால் 01.02.2024 க்கு சற்று ஒரு மாதத்திற்கு முன்பு. நாங்கள் சம்மதத்துடன்

பிரிந்து கொண்டோம் என்றால் சரிதான். எனக்கும், என் மகனான பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. நான் என் மகனிடம் சொத்தை பாகம் பிரித்துதர நேரடியாக கேட்டேன், ஆனால் அவன் பாகம் பிரித்து தராமல் விற்க முயற்சித்ததால் வழக்கு போட்டேன். இராமநாதபுரத்தில் உள்ள வழக்கு 3ம் அயிட்ட சொத்து என் கணவருக்கு கிரையப்பாத்தியப்பட்ட சொத்து. 3ம் அயிட்ட சொத்திற்குண்டான மூல ஆவணங்களையோ, என் கணவர் பெயரில் கிரையம் பெற்ற அசல் கிரைய ஆவணங்களையோ தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணங்கள் அனைத்து என் மகனிடம்தான் உள்ளது. 3ம் இலக்க சொத்து என் கணவரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து அல்ல என்றும், அது வேறுஒரு நபருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு 4 அயிட்ட சொத்துக்களுக்குண்டான அசல் ஆவணங்கள் மளிகைக்கடையில் உள்ளது என்றால் மளிகைக்கடை என் மகனின் கட்டுப்பாட்டில் உள்ளது. 2, 3 வாதிகள் என் கணவரின் விருப்பம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டதாலும், 4ம் வாதிக்கு செய்யவேண்டிய சீர்வரிசைகளை செய்து திருமணம் செய்து கொடுததுவிட்டதாலும், என் கணவர் என் மகனுக்காகத்தான் சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. சொத்துக்கள் பிரதிவாதியின் நலனுக்ககாக கிரையம் பெறப்பட்டதால் எங்களுக்கு பாகஉரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.